**தலைப்பு - 403 மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுகளைக் கொண்டமைந்த 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11 (1) பிரிவு பிரகாரம் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11 (2) பிரிவு பிரகாரம் அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆம் ஆண்டு யூலை 15 ஆம் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்-கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்குகொடுக்கும் அலுவலர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38(1) (இ) உப பிரிவு பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பராமரிக்கப்படுகின்றது என்பதற்கு கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டும். மேலும், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொண்டு அதன்படி முறைமையை பயனுள்ளவாறு கொண்டுச்செல்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

**1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை**

---

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றென்.

(அ) நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகள் பற்றி என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்**

---

**1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

---

நிதிசாராத சொத்துக்கள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் சொத்து-க்கள், உபகரணங்கள் மற்றும் பொறித்-தொகுதிகளின் பெறுமதி ரூபா.640,032,832 ஆயினும், அது கணினி அச்சீட்டின்படி (எஸ் ஏ 82) ரூபா.722,446,259 ஆகியதால் ரூபா. 82,413,427 இல் இணங்கவில்லை. | தங்களது அவதானிப்பின்படி, நிதிக் கூற்று தொகுதியில் ACA-6 கூற்றுக்குப் பதிலாக இணைக்கப்பட்டுள்ள SA-82 படிவத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ரூபா. 82,413,427 ஆன வேறுபாடு உள்ளது என்பதை ஏற்றுக்-கொள்கின்றேன். | செவ்வையாக நிதிக் கூற்று-களை தயாரி-த்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)மீளாய்விற்கான ஆண்டில் திசெ-ம்பர் 31 ஆம் திகதியில் 43 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.5,768,047,016 எஞ்சியிருந்ததுடன், அது 24% தொடக்கம் 100% வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் இவ்வமச்சின் செலவு விடயத்தில் ஏதேனும் மீதி உள்ளமை ஏற்றுக்கொள்ளுதல். | செவ்வையாக மதிப்பீ-டுகளை தயாரித்து செலவினங்களை முகாமைத்துவம் செய்தல். |
| (ஆ) நிதி ஒழுங்குவிதி 66 இன்கீழ் 3 செலவு விடயங்களில் மாற்றப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து 64% தொடக்கம் 100% இடையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | ஏதேனும் மீதி இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட செலவின விடயங்கள்மூலம் நி.ஒ.விதி 66 இன்கீழ் ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டுள்ளன. | -அதே- |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடமைகளை மேற்கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடங்களை பழுதுபார்த்தல் மற்றும் நிருமாணிப்புகளுக்கு ஏற்புடையதான பொறுப்புகளை நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பான கூற்று மற்றும் பொறியியலாளர் அறிக்கை-களுடன் ஒப்பிடுகையில் ரூபா. 562,365,647 ஆன வேறுபாடு காணப்பட்டது. | கல்வி அமைச்சின் பொறியிய-லாளர்களது பொறுப்புகள் தொட-ர்பாக உசாவியபோதும், 2022/02/28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்குகளை தயாரி-த்து முடிவுறுத்த இயலுமான வகையில் ஏற்புடைய பொறுப்பு-கள் கிடைக்கப்பெறாமை | பொறுப்புகள் மற்றும் கடமைகளை செவ்-வையாக அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் வெளிப்-படுத்தல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர் | கணக்காய்வு அவதானிப்பு ஒழுங்கமையாமை | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) **2018** சனவரி **24** ஆம் திகதிய **02/2018** ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | மனித வளங்களின் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை | மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கும் நடவடி-க்கைகள் தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளன. | சுற்றுநிருபங்களின் ஏற்பாடு-களுக்கு ஒழுங்கமை-வாக நடவடி-க்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(01) இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2018 பெப்ருவரி 06 ஆம் திகதிய **05/2018** ஆம் இலக்க (திருத்தம் செய்த) சுற்றறிக்கை | பிரசைகள்/சேவை பெறுநர்கள் பட்டயம் பிரகாரம், நிறுவனத்தால் பிரசைகள்/சேவை பெறுநர்கள் பட்டயம் தயாரிக்கப்படவில்லை | பிரசைகள்/சேவை பெறுநர்கள் பட்டயம் தற்போது தயாரித்து முடிவுறுத்தியுள்ளதுடன் அச்சிடும் நடவடிக்-கைகளை மட்டும் மேற்கொள்ளப்பட-வுள்ளது. | -அதே- |

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்றிட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 03 ஆவது பந்தி பிரகாரம், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக இற்றைப்ப-டுத்திய நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள் உள்ளடங்கும் வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அமைப்புக் கட்டமைவு தயாரித்து முடிவு-றுத்தப்படாமையால் அதனை செயற்றிட்டத்தில் உள்ளடக்-குவதற்கு இயலாமை. | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வேறு அமைச்சுகளுக்குரிய 2 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டு தொடக்கமும், 6 வாகனங்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கமும் பயன்படுத்தப்பட்டாலும், அந்த வாகனங்களை சுவீகரித்துக்கொள்வதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை தவறப்பட்டிருந்தது. | சுவிகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சுவிகரித்துக்கொள்ளும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.3 வெளிநாட்டு கருத்திட்டங்களின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் செயற்றிட்டம்படி மகளிர் உதவி தொலைபேசி சேவை கருத்திட்டத்தின் (Toll Free Help Lines Project) நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ரூபா.மில்லியன் 79 ஐ ஒதுக்கீடு செய்திருப்பினும், ரூபா.மில்லியன் 7.19 ஐ மட்டும் செலவிடப்பட்டிருந்ததுடன், அது மொத்த ஒதுக்கீட்டு தொகையில் 8% மட்டுமே ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை | கருத்திட்டங்கள் பொருட்டு ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ள நிதியை, உரிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சுரக்ஷா மாணவர் காப்புதி நிகழ்ச்சித்திட்டம் | | |
| (i) | காப்பீடுகளின் பொருட்டு நிறுவன-ங்களை தெரிவு செய்கையில் 2006 பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக 2018 ஒக்டோபர் 1 தொடக்கம் 2022 திசெம்பர் 1 வரையிலான காலப்பகுதிக்குள் அலியான்ஸ் இன்சுவரன்ஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்திடம் ஓராண்-டுக்கும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடம் 04 ஆண்டுக-ளுக்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டி-ருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | பெறுகை வழிகாட்டல் கோவைக்கமைவாக நடவடிக்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். |
| (ii) | சுரக்ஷா மாணவர் காப்பீடு முறை நடைமுறைப்படுத்திய திகதி தொ-டக்கம் **2021** திசெம்பர் வரை சமர்ப்பிக்கப்பட்ட **33,974** விண்ணப்-பங்களை நிராகரிக்கப்பட்டிருப்பி-னும், அவ்வாறு நலன்கள் கிடை-க்கப்பெறாமைக்கான காரணங்கள் தொடர்பாக பின்னாய்வுகளை மே-ற்கொள்ளுதல் அமச்சினால் மேற்-கொள்ளப்படவில்லை. எல்லா தக-வல்களையும் அவதானிப்பதற்காக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கணினி தரவு முறை-மை பேணிச் செல்லப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட நிறுவன-ங்களிடமிருந்து நிராகரி-த்தல் தொடர்பான தகவல்களை அவ்வப்-போது வழங்கப்பட்-டுள்ளது. | தாமதமின்றி நலன்களை வழங்குவதற்கு நடவடி-க்கை எடுத்தல் வேண்-டும் மற்றும் காப்புறுதி நிறுவனத்திடம் சமர்ப்பி-க்கப்படும் காப்புறுதி விண்ணப்பங்கள் தொட-ர்பான தகவல்களை உள்ளடக்கி பாடசா-லைகளில் அல்லது அமைச்சின் கணினி முறைமையில் பராமரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பாடசாலை சீருடை துணி வழங்குதல். | | |
| (i) பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.2.2 பந்திக்கமைவாக வழங்குநர்களின் கொள்ளளவு தொடர்பான முன்தகைமைகளை பரிசோதனை செய்யாது 2021 ஆண்டுக்காக சீருடைகளுக்கான துணி வழங்கும் ஒப்பந்தம் அளிக்கப்பட்டதனால், 2021 ஆண்டுக்கு தேவையான எல்லா சீருடை துணிகளையும் பாடசாலைகளிடம் வழங்குவதற்கு 2021 சனவரி 31 ஆம் திகதி வரை ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | பெறுகை வழிகாட்டல் கோவைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) பாடசாலைகள் மற்றும் வலய மட்டத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக இற்றைப்படுத்திய செவ்வையான தரவு முறைமை இல்லாமை மற்றும் 2021 ஆண்டின் 1 ஆம் ஆண்டில் சேர்வதற்கு எதிர்பார்க்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை எதிர்வுகூறுவதற்கு இயலாமை போன்ற விடயங்கள் காரணமாக மீண்டும் சீருடைகளின்பொருட்டு 1,279,342 துணி மீற்றர் கொள்வனவு செய்வதற்கு 2021 மார்ச் 23 ஆம் திகதி நடைபெற்ற நிலையான பெறுகை குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு ரூபா.299,004,940 ஐ செலவிடப்பட்டிருந்தது. அதன்போது முதலாவது கட்டளையில் எஞ்சியிருந்த ரூபா.16,090,230 பெறுமதியான 15 தொகுதிகளுக்கு ஏற்புடையதான 54570 துணி பெக்கற்களின் அளவு மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் சீருடைகளை கொள்-வனவு செய்தல் கல்வி அமைச்சு மூலம் மேற்-கொண்டுள்ளதுடன், ஆரம்ப கட்டளை மூலம் வழங்கப்படாதிருந்த முதலாம் ஆண்டு மற்றும் குறை சீருடை துணிகளை வழங்குதல் இராஜாங்க அமைச்சு மூலம் மேற்கொண்டு-ள்ளதாகவும், முதலா-வது கட்டளையால் வழங்கியுள்ள 15 பாட-சாலை சீருடைகளுக்-குரிய சீருடை வகை-களில் எஞ்சிய துணி-களும், மேலதிக கட்ட-ளையுடன் சம்பந்தப்பட்ட வழங்குநர்கள் விநி-யோகிப்பதற்கு நடவ-டிக்கை எடுத்திருத்தல். | வருடாந்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக இற்றைப்படுத்துகின்ற வகையில் செவ்வையான தரவு முறைமை பராமரித்தல் வேண்டுமென்பதுடன், மதிப்பீடுகளை செவ்வையாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (iii) 2021 ஆண்டுக்கு தேவையான எல்லா சீருடைகளையும் 2020 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளிடம் வழங்குதல் தேவையாயினும், இறுதி சீருடைகளின் இருப்புகளை வலய அலுவலகத்திடம் 2021 ஆம் ஆண்டு யூலை 19 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், பெறுகை திட்டம் படி 2021 ஆண்டுக்காக சீருடை துணி வலய அலுவலகங்களுக்கு கையளிப்பதற்கு 07 மாதங்கள் விஞ்சியிருந்தன. | மேலதிக கட்டளை மூலம் பாடசாலை சீருடைகளை வழங்கு-வதற்கு நேரிட்டதால் தாமதங்கள் ஏற்படுதல். | பெறுகை திட்டம் வரையிலான காலப்பகுதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | அமைச்சினால் ரூபா.3,500,000 ஐ செலவிடப்பட்டு மகளிர் தொழில்முயற்சியாளர்களின் பொருட்டு டிஜிரல் சந்தைப்படுத்தல் மேடை (Digital Marketing Platform) 2020 ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்தது. மகளில் தொழில்முயற்சியாளர்களின் பொருட்டு 13 தொகுதிகளின் கீழ் பதிவு செய்வதற்காக இது நிருமாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2022 மே மாதமாகும் போதும், 04 தொகுதிகளின்கீழ் 8 தொழில்முயற்சியாளர்கள் மட்டும் பதிவாகியிருந்தனர். | கருத்து தெரிவிக்கப்படவில்லை | பொருளாதார ரீதியாக பயனுள்ள நடவடிக்கை-களில் நிதியை ஈடுபடுத்தல். |

### 3.5 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கை பெறுமதி ரூபா. 423,077,168 ஆன 18 பாடசாலைகள் நிருமாணித்தல் தொடர்பாக 2021 திசெம்பர் 31 திகதியில் நிருமாணிப்புகளை முடிவுறுத்தப்பட வேண்டிய காலம் 1 ஆண்டு தொடக்கம் 4 ஆண்டுகள் முடிவடைந்திருப்பினும், அந்த நிருமாணிப்புகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன், அதற்கான காரணங்கள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை | நிருமாணிப்பு நடவடிக்கைகளை உடன்படிக்கை மேற்கொண்ட காலப்பகுதிக்குள் முடிவுறுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒவ்வொரு மாவட்டத்திலும் மும்மொழி பாடசாலை கட்டிடங்களை நிருமாணிக்கும் கருத்திட்டத்தின்கீழ் 14 பாடசாலைகளில் 33 கருத்திட்டங்களில் வேலைகளை முடிவுறுத்தல் மற்றும் கொத்தணி பாடசாலை முறைமை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 69 பாடசாலைகளில் 72 கருத்திட்டங்களின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருப்பினும், அவற்றின் முன்னேற்றம் ஒழுங்குமுறையில் 2% தொடக்கம் 10% ஆன மட்டத்தில் காணப்பட்டது. | 2020,2021 ஆண்டுகளில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமை மற்றும் இரசீதுகளை சீராக்குவதற்கு திறைசேரியிடமிருந்து கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. | - அதே - |

## 3.6 பணம் விடுவிக்கப்பட்டிருப்பினும் முன்னேற்றம் காணாத கருத்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இடர்களை எதிர்நோக்கிய பெண்கள் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டலை நோக்கமாகக்கொண்டு, அம்பாறை மாவட்டத்தில் திரிய வனிதா ஆடைகள் மற்றும் பாதணி கருத்திட்டம், திரிய வனிதா கைஇயந்திர முடிவுப்பொருள் விசேட கருத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பித்து, 2021 ஆம் ஆண்டு இறுதியில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல், கட்டிடங்களை பழுதுபார்த்தல் என்பவற்றுக்காக அமைச்சினால் ரூபா.6,863,065 ஐ செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் இந்தக் கருத்திட்டத்தின் மொத்த பயனுகரிகளின் எண்ணிக்கை 20 போன்ற குறைந்த பெறுமதியில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | பொருளாதார ரீதியாக பயனுள்ள நடவடிக்கைகளில் நிதியை பயன்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டுக்காக 402 வகைகளுக்குரிய பாடப் புத்தகப் பிரதிகள் 32,540,750 ஐ 2021 ஆம் ஆண்டு 15 ஆம் திகதி விநியோகம் செய்து முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதில் 12,365,485 புத்தகங்கள் அல்லது 14% களஞ்சியங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | திட்டமிடப்பட்ட அலுவல்களை உரிய காலப்பகுதிக்குள் வினைத்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |